அரைநூற்றாண்டாக தன்னுடைய அன்பால் மணவாழ்வை மனநிறைவான வாழ்க்கையாக அளித்துள்ளார் துர்கா!

# எதிர்பார்ப்புகளற்ற அன்பும் விட்டுக் கொடுத்தலும் இல்வாழ்வை நல்வாழ்வாக்கும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது 50வது திருமண நாளையொட்டி சமூக வலைதளப் பதிவு!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது 50வது திருமண நாளையொட்டி நேற்று முன்தினம் (20.8.2025) கோபாலபுரம் இல்லத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.



கோபாலபுரம் இல்லத்தில், நேற்று முன்தினம் (20.8.2025) முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மனைவி திருமதி துர்கா ஸ்டாலின் அவர்களுடன் தனது 50வது திருமண நாளையொட்டி தாயார் திருமதி தயாளு அம்மாள் அவர்களை சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

சென்னை, ஆக.22-

''அரைநூற்றாண்டாக என் வாழ்வின் உறுதுணையாக என்னில் பாதியாக துர்கா அவர்கள் நுழைந்து, தன்னுடைய அன்பால் மண வாழ்வை மன நிறைவான வாழ்க்கையாக அளித்துள்ளார் என்றும், எதிர்பார்ப்புகளற்ற அன்பும் விட்டுக் கொடுத்தலும் இல்வாழ்வை நல்வாழ்வாக்கும் என இளைய தலைமுறையினருக்கும் சொல்லிக் கொள்கிறோம் என்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது 50வது திருமண நாளையொட்டி வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:

**அரைநூற்றாண்டாக என் வாழ்வின் துணையாக என்னில் பாதியாக துர்கா அவர்கள் நுழைந்து, தன்னுடைய அன்பால் மணவாழ்வை மனநிறைவான வாழ்க்கையாக அளித்துள்ளார்!**

**அவர் மீதான அளவற்ற அன்பே என் நன்றி!**

**எதிர்பார்ப்புகளற்ற அன்பும் விட்டுக்கொடுத்தலும் இல்வாழ்வை நல்வாழ்வாக்கும் என இளைய தலைமுறையினருக்குச் சொல்லிக் கொள்கிறோம்.**

**வீடும் நாடும் போற்றும் வாழ்வை அனைவரும் வாழ்ந்திட விழைகிறோம்!**

இவ்வாறு முதல்வர் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

---

மாவட்ட செயலாளர் பிரகாஷ் எம்.எல்.ஏ. சிறப்புரை

# கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## முருகன்- மேயர் சத்யா பங்கேற்பு!

கிருஷ்ணகிரி, ஆக. 22 –

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம் ஒசூரில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் மாவட்ட அவைத்தலைவர் யுவராஜ் தலைமையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளரும், ஒசூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான பிரகாஷ் கலந்து கொண்டு

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசின் சாதனைகளை மக்களிடம் கொண்டு போய் சேர்க்கும் வகையில் 'ஓரணியில் தமிழ்நாடு' உறுப்பினர் சேர்க்கை பணியில் அனைவரும் தீவிரமாக ஈடுபட்டு கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி முழு அளவில் உறுப்பினர் சேர்க்கை பணியினை சிறப்பாக செய்தமைக்கு பாராட்டு தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்கள் அடுத்த மாதம் கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு வருகை தந்து பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி, நிறைவுற்ற பணிகளை துவக்கி வைத்து, புதிய திட்ட பணிகளுக்கு அடிக்கல் நாட்டி எழுச்சி உரையாற்ற உள்ளார். கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டத்தை சேர்ந்த அனைத்து நிர்வாகிகளும் கழக தலைவர் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகளை சிறப்பாக ஏற்பாடு செய்து பணியாற்ற வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியாக அவர்கள் அறிவித்துள்ளபடி 2026 சட்டமன்றத் தேர்தலில் 200 க்கும் மேற்பட்ட தொகுதிகளில் வெற்றி வாகை சூடுவதற்கு ஏதுவாக கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டத்தில் உள்ள ஓசூர், தளி, வேப்பனப்பள்ளி மூன்று சட்டமன்றத் தொகுதிகளிலும் கழகத் தோழர்கள் திராவிட மாடல் அரசின் மக்கள் நலத்திட்டங்களையும், சாதனைகளை எடுத்துக் கூறி வெற்றி வாகை சூடுவதற்கான பணிகளை மேற்கொள்ள வேண்டும். எனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இந்த கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகன், ஓசூர் மாநகர மேயர் சத்யா, மாநில இளைஞர் அணி துணை செயலாளர் சீனிவாசன்,

மாநில கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை செயலாளர் மாதேஸ்வரன், மாநில பொறியாளர் அணி துணை செயலாளர் ஞானசேகரன் ,

துணை மேயர் ஆனந்தையா, மாவட்ட துணை செயலாளர்கள் சின்னசாமி, புஷ்பா சர்வேஷ், பொருளாளர் சுகுமாரன் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் வீரா ரெட்டி, எல்லோரா மணி, கிரீஸ், பொதுக்குழு உறுப்பினர்கள் ஜெயராமன் ,சீனிவாசன், முனிராஜ், அப்துல் கலாம், தனலட்சுமி, அருணா பூசன், ஒன்றிய செயலாளர்கள் கஜேந்திர மூர்த்தி, நாகேஷ், பாக்யராஜ், சின்ராஜ், ராமமூர்த்தி, ஸ்ரீதர், அப்பையா, திவாகர், ஸ்ரீனி வாசுலு, ராஜா, கருணாகரன், ரகுநாத், , பேரூர் கழக செயலாளர்கள் ஸ்ரீனிவாஸ், தஸ்தகீர், உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

---

மாற்றுத் திறனாளிகளுக்கான

# வேலை வாய்ப்புக்கு ஒன்றிய அரசு செய்தது என்ன?

## மக்களவையில் – கனிமொழி கருணாநிதி கேள்வி!



புதுடெல்லி, ஆக. 22 -

மாற்றுத்திறனாளிகளுக்கான திறன் மேம்பாடு- வேலை வாய்ப்புகள் குறித்து திமுக துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி மக்களவையில் 19.8.2025 அன்று எழுத்துபூர்வமாக கேள்விகளை எழுப்பினார்.

அக்கேள்விகள் வருமாறு:

"மாற்றுத்திறனாளிகளின் திறன் மேம்பாட்டுக்கான தேசிய செயல் திட்டத்தின் விவரங்கள் (NAP-SDP) என்ன? இத்திட்டத்தின் நோக்கங்கள் மற்றும் முக்கிய கூறுகள் யாவை?

இந்தத் திட்டத்தின் கீழ் மாற்றுத் திறனாளிகளுக்கான தொழில் பயிற்சி மையங்களை அரசாங்கம் நிறுவியுள்ளதா, அப்படியானால், அதன் விவரங்கள், தமிழ்நாடு உட்பட மாநிலம் மற்றும் யூனியன் பிரதேசங்கள் வாரியாக என்ன?

மாற்றுத் திறனாளிகளுக்கான திறன் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தொழில் பயிற்சியை முடித்த பிறகு, மாற்றுத்திறனாளிகள் அரசு மற்றும் தனியார் துறைகளில் வேலை வாய்ப்பைப் பெறுவதை உறுதி செய்ய அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன?

இந்தத் திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற மாற்றுத்திறனாளிகளை பணியமர்த்துவதில் தனியார் துறை பங்கேற்பை ஊக்குவிக்க ஏதேனும் சிறப்பு சலுகைகள் அல்லது திட்டங்கள் உள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?" கனிமொழி கருணாநிதி எம்.பி. கேள்விகளை எழுப்பினார்.

இக்கேள்விகளுக்கு ஒன்றிய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை இணையமைச்சர் பி.எல். வர்மா அளித்த பதில் வருமாறு:

"சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்துக்கு உட்பட்ட மாற்றுத்திறனாளிகள் அதிகாரமளித்தல் துறையானது.

மாற்றுத்திறனாளிகளின் திறன் மேம்பாட்டுக்கான தேசிய செயல் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. மாற்றுத்திறனாளிகளின் திறன்களை மேம்படுத்தி அவர்கள் அதிக வேலைவாய்ப்பைப் பெறுதல் மற்றும் தன்னம்பிக்கையோடும் உற்பத்தித் திறனோடும் இந்த சமூகத்துக்கு பங்களிப்பு செய்வதை நோக்கமாகக் கொண்டு இந்த தேசிய செயல் திட்டத்தை அரசு செயல்படுத்துகிறது.

இத்திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் உள்ள பல்வேறு அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் மூலம் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்படுகிறது. பொதுவான திறன் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு வகுக்கப்பட்டுள்ள விதிமுறைகளின்படி மேற்கண்ட பயிற்சித் திட்டங்களுக்கு நிதியளிக்கப்படுகிறது. இது அவ்வப்போது அமைச்சகத்தால் தேவைக்கேற்ப திருத்தியமை க்கப்படுகிறது.

இத்திட்டத்தின் படி 15-59 வயதுக்குட்பட்ட குறைந்தது 40% மாற்றுத்திறன் கொண்ட மாற்றுத் திறனாளிகள் பயிற்சி பெற தகுதியுடையவர்கள். மாற்றுத் திறனாளிகள் திறன் மேம்பாட்டுப் பயிற்சியும், வேலை வாய்ப்பும் பெறுவதை நோக்கமாகக் கொண்டு https://pmdaksh.depwd.gov.in/login என்ற வலைத் தளத்தில் 'திவ்யாங்ஜன் ரோஸ்கர் சேது' என்ற பிரத்யேக தொகுதி உள்ளது.

இது மாற்றுத் திறனாளிகளுக்கும் மாற்றுத் திறனாளிகளை பணியமர்த்தும் பல்வேறு நிறுவனங்களுக்கும் இடையே ஒரு பாலமாக செயல்படுகிறது. நாடு முழுவதும் உள்ள தனியார் நிறுவனங்களில் கிடைக்கும் வேலைவாய்ப்பு/வருவாய் வாய்ப்புகள் குறித்த பகுதி சார்ந்த தகவல்களை இந்த தளம் வழங்குகிறது. பதிவு செய்யப்பட்ட மாற்றுத் திறனாளிகள் வேலைவாய்ப்பு பெறுவதற்காக இது செயல்படுத்தப்படுகிறது.


இவ்வாறு அவர் கூறினார்.

---

சிப்பாய்ப் புரட்சிக்கு நூற்றாண்டுக்கு முன்பே அந்நிய ஆதிக்கத்திற்குச் சவால் விட்ட

# ஒண்டி வீரனின் வீரவரலாற்றை இந்தியா முழுவதும் பரவச் செய்திட இந்நாளில் உறுதியேற்போம்!

## மாவீரர் ஒண்டி வீரனின் நினைவு நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!



சென்னை, ஆக. 22 -

மாவீரர் ஒண்டிவீரனின் நினைவு நாளையொட்டி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:

**ஆங்கிலேயருக்கு நெல்லைக் கப்பமாகக் கட்டமறுத்து, நெற்கட்டும் செவலை நெற்கட்டான்செவலாக மாற்றி, அந்நிய ஆதிக்கத்திற்குச் சவால் விட்ட தென்மலைப் போரின் மாவீரர் ஒண்டி வீரனின் நினைவுநாளில் அவருக்கு என் வீரவணக்கம்!**

**சிப்பாய்ப் புரட்சிக்கு நூறாண்டுகளுக்கு முன்பே விடுதலை உணர்வோடு தென் தமிழ்நாட்டின் தீரர்களான பூலித்தேவனும் படைத்தளபதி ஒண்டிவீரனும் போர் செய்தனர் எனும் வீர வரலாற்றை இந்தியா முழுவதும் பரவச் செய்திட இந்நாளில் உறுதியேற்போம்!**

இவ்வாறு முதல்வர் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

---

# இன்னும் ஒரு நூற்றாண்டு இரும்!

## கவிப்பேரரசு வைரமுத்து வாழ்த்து!



**இணையில்லா**
**இணையர் நீங்கள்**

**நல்ல தம்பதிகள் நாட்டுக்கு**
**எடுத்துக்காட்டு**

**சொல்லுக்குள் உறையும்**
**பொருளைப் பிரிக்கமுடியுமா?**
**உங்கள் உறவும் அப்படித்தான்!**

**வான்விட்டு நீலத்தை**
**வடிக்க முடியுமா?**
**உங்கள் வாழ்வியல்**
**நெருக்கம் அப்படித்தான்**

**சுழற்றியடித்த புயல்**
**சுண்டியெறிந்த மழை**
**கண்ணைப் பறிக்கும் மின்னல்**
**காது பிளக்கும் இடி**
**அத்தனையும் தாண்டி**
**ஏரி நீரில் படகுமேல்**
**ஏறிச் செல்வது போல்**
**இயல்பாய் வாழ்கிறீர்கள்!**

**வள்ளுவர் பாடிய வாழ்வியல் இணையரே**
**வாழிய பல்லாண்டு!**

**அரை நூற்றாண்டு கண்டீரே**
**இன்னும் ஒரு நூற்றாண்டு**
**காண்பீரே**

**தமிழ்நாடும் வாழ்கிறது**
**உங்கள் வாழ்வோடு!**



கவிப்பேரரசு வைரமுத்து

---



தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விடம் மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் சேலம் மாவட்டம், நேரு நகர் மற்றும் காந்தி நகர் பகுதிகளில் கட்டப்பட்டுவரும் அடுக்குமாடி குடியிருப்புகளை நேற்று முன்தினம் (20.08.2025) அமைச்சர்கள் தா.மோ. அன்பரசன், இரா.இராஜேந்திரன் ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு மேற் கொண்டார்கள். உடன் தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குனர் எல். நிர்மல்ராஜ், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விடம் மேம்பாட்டு வாரிய கண்காணிப்பு பொறியாளர் செந்தில்குமார் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.